சுருக்கம்

தொழில்நுட்பக் கல்வி – 2011–2012ஆம் கல்வியாண்டு தமிழ்நாடு பொறியியல் மாணவர் சேர்க்கை – சென்னை, அண்ணா பல்கலைக்கழகம் நடத்தும் கலந்தாய்வில் கலந்து கொண்டு சேர்க்கை பெறும் மாணவர்களிடமிருந்து தொடக்கக் கட்டணம் வசூல் செய்தல் – சென்னை, அண்ணா பல்கலைக்கழகத்துக்கு அனுமதி – ஆணை – வெளியிடப்படுகிறது.

உயர்கல்வி (ஜே2) துறை

அரசாணை (1டி) எண்.75 நாள் 21.4.2011

சித்திரை 12,
திருவள்ளுவர் ஆண்டு 2042

படிக்கப்பட்டவை:

1, அரசாணை (1டி) எண்.61, உயர்கல்வித்துறை, நாள் 19.3.2010.
2. சென்னை, அண்ணா பல்கலைக்கழக துணைவேந்தரின் நே.மு.க.எண்.112/இஏ3/2011, நாள். 18.2.2011.

------

ஆணை

மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் சென்னை, அண்ணா பல்கலைக்கழக துணைவேந்தர் 2011–2012ஆம் கல்வியாண்டு தமிழ்நாடு பொறியியல் கல்லூரிகள் மாணவர் சேர்க்கையின்போது அரசு ஒதுக்கீட்டு இடங்களுக்காக நடைபெறும் கலந்தாய்வில் கலந்துகொண்டு தேர்வு செய்யப்படும் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களிடமிருந்து தொடக்கக் கட்டணமாக ரூ.1000/– (ரூபாய் ஆயிரம் மட்டும்), மற்றும் பிற மாணவர்களிடமிருந்து ரூ.5000/– (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) வசூலிக்க அனுமதியளிக்குமாறு கோரியுள்ளார்.

2. மேற்கண்ட சென்னை, அண்ணா பல்கலைக்கழக துணைவேந்தரின் கோரிக்கையினை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்றுக்கொள்ள முடிவு செய்து, 2011–2012ஆம் கல்வியாண்டு, தமிழ்நாடு பொறியியல் கல்லூரிகள் மாணவர் சேர்க்கையின்போது அரசு ஒதுக்கீட்டு இடங்களுக்காக நடைபெறும் கலந்தாய்வில் கலந்துகொண்டு தேர்வு செய்யப்படும் தமிழ்நாட்டை சேர்ந்த ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களிடமிருந்து தொடக்கக் கட்டணமாக ரூ.1000/– (ரூபாய் ஆயிரம் மட்டும்) மற்றும் பிற மாணவர்களிடமிருந்து ரூ.5000/– (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) வசூலிக்க சென்னை, அண்ணா பல்கலைக்கழகத்திற்கு அனுமதி வழங்கி ஆணையிடுகிறது. மேலும் அவ்வாறு வசூலித்த தொகையினை, மாணவர்கள் அவர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட கல்லூரிகளில் சேர்ந்த பின்னர் சம்பந்தப்பட்ட கல்லூரிகளுக்கு அனுப்பி வைக்குமாறு

சென்னை, அண்ணா பல்கலைக்கழகத்தை கேட்டுக் கொள்வதுடன், ஒற்றைச் சாளர கலந்தாய்வில் கலந்துகொண்டு சேர்க்கை பெறும் மாணவர்களிடமிருந்து இத்தொகையினை தவிர்த்து, மீதமுள்ள தொகையினை பெற்றுக் கொள்ளுமாறு அனைத்து அரசு/அரசு உதவிபெறும் மற்றும் சுயநிதி பொறியியல் கல்லூரிகளையும் அரசு அறிவுறுத்துகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.கணேசன்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
தொழில்நுட்பக் கல்வி ஆணையர், சென்னை–25.
பதிவாளர், அண்ணா பல்கலைக்கழகம், சென்னை–25.
செயலாளர், பொறியியற் கல்லூரி மாணவர் சேர்க்கை,
அண்ணா பல்கலைக்கழகம், சென்னை.25.
பதிவாளர், அண்ணா தொழில்நுட்ப பல்கலைக்கழகம், சென்னை /திருச்சி/
கோயம்புத்தூர்/ திருநெல்வேலி/மதுரை
அனைத்து அரசு/அரசு உதவிபெறும் / சுயநிதி பொறியியல் கல்லூரிகள்.
(தொழில்நுட்பக் கல்வி ஆணையர், சென்னை–25 வழியாக)
இ.கோ. /உதிரி

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

சே. பூவதி அம்மாள் 21/4/11
பிரிவு அலுவலர்.